செய்தி வெளியீடு எண்.136 நாள்.07.03.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், வருவாய் துறை மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட 11,195 விவசாயிகளுக்கு ரூ.8 கோடியே 25 லட்சத்து 49 ஆயிரத்தி 800-க்கான நிதி தொகைக்கான ஆணைகளை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில், வருவாய் துறை மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட 11,195 விவசாயிகளுக்கு ரூ.8 கோடியே 25 லட்சத்து 49 ஆயிரத்தி 800-க்கான நிதி தொகைக்கான ஆணைகளை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.03.2017) வழங்கினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 06.03.2017 அன்று தலைமைச் செயலகத்தில் நிவாரண தொகைக்கான ஆணைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். இதனை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டு நெற்பயிர்களை இழந்த விவசாயிகளுக்கு நிவாரண உதவித் தொகைகள் வருவாய் துறை மற்றும் வேளாண்மை துறையின் மூலமாக கணக்கீடு செய்யப்பட்டு 11,195 விவசாயிகளுக்கு ரூ.8 கோடியே 25 லட்சத்து 49 ஆயிரத்தி 800-க்கான தொகைக்கான ஆணைகள் வழங்கப்படுகிறது. இது இரண்டு கட்டமாக பிரித்து வழங்கப்படுகிறது. முதற் கட்டமாக இன்று (07.03.2017) 8,597 விவசாயிகளுக்கு ரூ.6 கோடியே 40 லட்சத்து 86 ஆயிரத்தி 073-க்கான தொகைக்கான ஆணைகள் 103 கிராமங்களை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படுகிறது" என்று கூறினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கூறியதாவது "திருவள்ளூர் மாவட்டத்தில் இன்று வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகைக்கான ஆணைகள் 8,597 விவசாயிகளுக்கு ரூ.6 கோடியே 40 லட்சத்து 86 ஆயிரத்தி 073-க்கான தொகைக்கான ஆணைகள் வழங்கப்படுகிறது. இதில் 103 கிராமங்களில் 6,114 ஹெக்டர் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண ஆணைகள் வழங்கப்படுகிறது. விவசாயிகள் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது." என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.பி.எம்.நரசிம்மன் (திருத்தணி), திரு.எஸ்.விஜயகுமார் (கும்மிடிப்பூண்டி), திரு.டி.ஏ.ஏழுமலை (பூவிருந்தவல்லி), மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, இணை இயக்குநர் (வேளாண்மைத் துறை) திரு.முருகவேல், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.திவ்யஸ்ரீ மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.
~~~~~

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்